ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2277/52 - 2022 අප්‍රේල් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.04.28
2277/52 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### கந்தளை பிரதேச சபை அதிகார எல்லையினை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) பிரிவு 8(E) இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய கந்தளை பிரதேச சபை அதிகார எல்லையினை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ** (பா.உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடிகள்,
"சுஹுருபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2022, ஏப்பிறல் 26.*

---

### கந்தளை பிரதேச சபை அதிகார எல்லை பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கந்தளை பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தினை, 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் 26 ஆந் திகதி நகர அபிவிருத்தி மற்றும்*

1A - G 36703 — 50 (2022/04)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*வீடமைப்பு அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் பிரிவு 8(F) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது என அச்சட்டத்தின் பிரிவு 8(G) இன் பிரகாரம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ** (பா.உ.),
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*17 மற்றும் 18 ஆவது மாடிகள்,*
*"சுஹுருபாய",*
*சுபுதிபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022, ஏப்பிறல் 28.*

---

## கந்தளை பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு இணங்க கந்தளை பிரதேச சபை அதிகார எல்லைப் பிரதேசத்தினை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தினை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் குறித்த சட்டத்தின் 8(F) ஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2022, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உதய நானாயக்கார,**
*தலைவர்.*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2022, ஏப்பிறல் 28.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.